பாசுரம் - 27

*கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! * உன்றன்னைப்*
*பாடிப்பறை கொண்டு யாம் பெறும் சம்மானம் **
*நாடு புகழும் பரிசினால் நன்றாகச் **
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே /
*பாடகமே என்றனைய பல் கலனும் யாம் அணிவோம் **
*ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற்சோறு **
*மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக் **
கூடி இருந்து குளிர்ந்தேலோ ஓர் எம் பாவாய்.

27-1 முமுக்ஷுவுக்கு அவசியமான ஸ்வரூப, உபாய, உபேய ஞானத்தை மூன்று பத்தாய் இத்திருப்பாவையில் சொன்னது.

ஸ்வஞானம், ப்ராபக ஞானம், ப்ராப்ய ஞானம் முமுக்ஷோ: பி$_4$:
ஞான த்ரய உபாயதே$_3$யம் ஏதத$_3$ந்யந் ந கிஞ்சன
- பிரபலமான ஸ்லோகம்

மோஷத்தை விரும்புவனுக்கு தன் ஜீவாத்ம ஸ்வரூப அறிவும், உபாய அறிவும், பலத்தை பற்றிய அறிவும் அவசியம். மற்றவை தேவையில்லை. ஆகவே தத்வ, ஹித, புருஷார்த்தங்களை மூன்று பத்தாய் இத் திருப்பாவையிலே சொன்னது.

27-2 மாலே மணி வண்ணா என்று முற்பாட்டிலே பறையை வேண்ட, அவனும் அதை அருளி "பறை பெற்றதால் என்ன பலன்" என்று வினவ அதற்கு பதில் இப்பாசுரம்.

27-3 *கூடாரை வெல்லும்* சேராத பகைவரிடம்கூட தன் வீரத்தையும், மேன்மையும் காட்டி அவர்களை வசீகரிக்கும் கோவிந்தன். அவரது வெறுப்பை வெல்லுபவன். *மாற்றானை மாற்று அழிக்க வல்லான் இவன்*.

27-4 பொல்லாங்கு இல்லாத நல்லான் இவனேயாகில் விரோதியையும் ரக்ஷித்து அருளுகிறான்.

நல்லாய் நீயே பொல்லாங்கு இலாமையின்
- ஸ்வாமி தேசிகன், மும்மணிக்கோவை

நீ ஒருவன்தான் உண்மையில் நல்லவன் பொல்லாங்கு எனும் தோஷம் அற்றதால். விரோதியையும் ரஷித்து அருளுபவன்

27-5 கூடாதாரை வெல்லும் இவன் குணம் கோவிந்தனாய் இருக்கும் இருப்பிலே காணலாம்.

விரோதிகளுக்கு கூட வேண்டாம் என்ற மனம் இல்லை. ஆனால் கூடுவதற்கான உபாயம் அறியாதவர் என்று அவர்களையும் உகந்து இருப்பவன்.

27-6 கூடுவாரை *ஸௌஸீல்ய, ஸௌலப்யாதி* குணங்களாலும், கூடாதவரை *ஶௌர்ய குணத்தாலும்* வெல்பவன்.

கூடுவார், கூடாதவர் என்னாது எல்லோரையும் தன் திருக்கல்யாண குணங்களாலே வெல்பவன்

27-7 கூடாதார் அம்புக்கு இரையாகி ஶௌர்ய குணத்திலும் கூடியவர் அழகுக்கு இலக்காகி ஸௌஸீல்ய, ஸௌலப்யாதி குணங்களிலும் விழுந்தனர்.

27-8 சிறு பெண்களாகிய நாங்கள் வீட்டு வாசலைத் தாண்டோம் என நினைத்திருக்க எம்மை வென்று உன்னோடு கூடும்படி செய்தாயே!

27-9 கூடாதாரும் ஒரு நாள் நம்மிடம் தோற்று வந்து கூடுவாரோ என்று ராவணனுக்காக காத்திருந்த ராமனிடத்து இக்குணம் ப்ரபலம்.

யதி வா ராவண: ஸ்வயம்
- வால்மீகி, ராமாயணம்

ராமன், இந்த ராவணன் என்றேனும் நம்மிடம் வந்து கூடி நம்மை தோற்பிப்பானோ என்று கிடந்தான். அதற்காகவே அனுமனையும் அங்கதனையும் தூது விடுத்துப் பார்த்தான்.

27-10 பஞ்சவரை பலவகையும் காத்து, இறுமாந்திருந்த துரியோதனை தொலைத்த இக்குணத்தை கண்ணனிடத்தில் காணலாம்.

கரிஷ்யே வசநம் தவ
- பாரதம்

என்று *"நீ சொல்வதை செய்வோம்"* என்றிருந்த பஞ்சவரை பலவகையும் காத்தாய். திருவடிக்கருகில் நெருங்கேன் என இறுமாந்த துரியோதனனைத் தொலைத்தாய்.

27-11 கூடாதவரை வெல்வதும் கூடியவரிடம் தோற்பதும் உன் இயற்கையான குணாதிசயம் அன்றோ!

27-12 அண்டம் அனைத்தும் அறத்தாலும், தீனர்களை தானத்தாலும், ஆசார்யர்களை அடிமைப்பணியாலும், பகைவரை யுத்தத்தில் வில்லாலும் ஜயிப்பவன் ராமன்.

ஸத்யேந லோகாந் ஜயதி தீ நாந் தாநேந ராகவ:
குரூந் ஶுஶ்ருஷ்யா வீரோ தநுஷா யுதி Sாத்ரவாந்
- வால்மீகி, ராமாயணம்ளவந்தார்,

27-13 அஸக்தரிடம்தான் இவன் அன்பு பொங்கி வழியும். இதை பசுக்களை மேய்ப்பதில் உள்ள ஆர்வத்தில் காணலாம்.

27-14 பரமபதத்திலும் மாடு மேய்ப்பதை உகந்து இருப்பானோ என இவனுடைய வாத்ஸல்யம் உயர்ந்திருக்கும்.

திவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி
செங்கனி வாய் எங்கள் ஆயர் தேவே
நம்மாழ்வார், திருவாய்மொழி 10-3-10

தன்னைப்போல ஷாட்குணபரிபூர்ணரான (ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி) முக்த நித்யரோடு பரமபதத்தில் கலந்து இருப்பதைவிட பசுக்களை மேய்ப்பதிலே உவந்து இருப்பவன்.

27-15 அதிலும், தானே மேயத் தெரிந்த பசுவைக் காட்டிலும் தட்டுத் தடுமாறும் இளங்கன்றிடம் வாத்ஸல்யம் இவனுக்கு அதிகம்.

கன்று மேய்த்து இனிது உகந்த காளாய் என்றும்
கடிபொழில் சூழ் கணபுரத்து என் கனியே என்றும்
- திருமங்கயாழ்வார், திருநெடுந்தாண்டகம் 15
காலி மேய்க்க வல்லாய்

கன்று மேய்த்து விளையாட வல்லானை

27-16 *உன்தன்னைப் பாடி.* பாடுவதாலேயே இவர்கள் உயிர் தரிப்பு.

இத்தனைக் காலம் பாடமல் இருந்த துன்பம் எல்லாம் நீங்கி வாயினால் பாடி, கேசவனைப்பாட, முகில்வண்ணன் பேர் பாட, மனத்துக்கினியானைப்பாட, மாயனைப் பாட, மைத்துனன் பேர் பாட, என்று பல விதமாய் சொல்லி இங்கே உன்தன்னைப் பாடி

27-17 *சம்மானம் பெறும் யாம்* **உனக்கு சேஷியாய், உன்னை அடைதலையே பெறும் பேறாக எண்ணி இருக்கும் நாங்கள்.**

அடைக்கலம் அடைந்தவர்க்கும் அருளுபவன் என்ற நம்பிக்கை உடைய நாங்கள்

27-18 **ஸீதைக்கு அளித்த ஸம்மானம் போலே, அதைப் பெறவே இன்று வந்தோம்**

பதிஸம்மாநிதா ஸீதா
- ராமாயணம்

தன்னைப் பின்தொடர்ந்த ஸீதைக்கு ராமன் ஸம்மானம் அளித்தார். அந்த ஸன்மானம் என்ன என்று வால்மீகி கூறவில்லை. தன் தோளிலிருந்த மாலையை அவளுக்கு இட்டார் என்றார் ஆழ்வான். தன் திருவடியை பிடிக்கும் பாக்கியத்தை அருளினார் என்றார் பட்டர்.

27-19 *நாடு புகழும் பரிசு.* **எம்பெருமான் அளிக்கும் பரிசுகள் நாட்டில் உள்ளோர் அதிசயிக்கும்படி இருக்கும். அல்பனைப் பற்றி பெற்ற வஸ்து அஸ்திரம், அசுத்தம். புருஷோத்தமனை வேண்டி பெற்றதின் புகழைச் சொல்லவும் இயலுமோ!**

27-20 **இவன் தனியாய் கொடுத்ததை** *அணிவோம்.* **ஆனால் அந்த நப்பின்னையுடன் சேர்ந்து அளித்ததை** *நன்றாக அணிவோம்.*

27-21 **இந்திரனின் ஹாரத்தை ராமன் ஸீதைக்கு அளிக்க, இருவரும் சேர்ந்து அனுமனுக்கு அளித்ததைப் போலே.**

ப்ரதேஹி ஸீபகே ஹாரம் யஸ்ய துஷ்டாஸி பாமிநி
- ராமாயணம்

ஸீதே! "உனக்கு மிக்க அன்புள்ளவனிடம் இந்த ஹாரத்தை கொடுப்பாய்" என்று இந்திரனின் ஹாரத்தை ராமன் ஸீதையிடம்

கொடுக்க அவள் அனுமனுக்கு அளித்தது. அதைப்போலே, நப்பின்னையுடன் சேர்ந்து அளித்த பரிசு.

27-22 பிடிக்கும் கைக்கு அணியும் ஆபரணம் சூடகம். கையை பிடித்தவுடன் கட்டி அணைக்கும் தோளுக்கு ஆபரணம் தோள் வளை. அணைத்தவுடன் முகர்ந்து அனுபவிக்க இவர்களுடைய காதுக்கும் கர்ண புஷ்ப ஆபரணம் தோடு, செவிப்பூ. அணைத்து தோற்று அவன் கீழே விழுந்து பிடிக்கும் திருவடிகளுக்கு ஆபரணம் பாடகம். இப்படி பல ஆபரணங்களை புகழ்ந்திருக்கும் திருமேனி உடைய நாங்கள் அணிவோம் என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்.

27-23 பிராட்டியின் செவிப்பூ, தோடு இவற்றுடன், கட்டு அவிழ்ந்த திருமுடியும் எம்பெருமானின் தோளை உரசியிருப்பதைப்போலே அந்த சம்மானம் பெறவே நாங்களும் வந்தோம்.

சகாஸதம் ஜ்யாகிணகர்க்கஶ: ஶ்ரேய$_4$:
சதுர்ப்பி$_4$ர் ஆஜானுவிலம்பி$_3$பி$_4$ர் பு$_4$ஜை:
ப்ரியாவதம்ஸோத்பல கர்ண பூ$_4$ஷண-
ஶ்லத$_2$ாலகாப$_3$ந்த$_4$ விமர்த்த$_3$ ஶம்ஸிபி$_4$:
- ஆளவந்தார், ஸ்தோத்ரரத்னம்

வில்லுடைய நாண் உரசி உரசி, பகவானின் திருக்கைகள் தழும்பு ஏறி கடினமாய் உள்ளது. மங்களகரமானது. அவை முழங்கால் வரை நீளமானவை. பிராட்டியின் செவிப்பூ, தோடு, அவளுடைய கட்டு அழிந்து சிலிசிலிர்க்கும் திருமுடியை அவனுடைய தோள்கள் உரசியிருக்கும் என்றார்.

27-24 நீ அணிவிப்பாய் என்று வேண்டாது யாம் அணிவோம் என்றது, மலரிட்டு நாம் முடியோம் என்னும் விரதம் கொண்ட இவர்கள் ஆபரணங்கள் அணிய இசைவாரோ என்று வருந்திக் கிடக்கும் அவன் எண்ணத்தை அறிந்து தாங்களே இசைந்து அணிந்தனர்.

27-25 அணிகலனோடு ஆடையையும் உடுக்க சொல்லி அந்த சேர்த்தி அழகை அவன் அனுபவிக்க வேண்டியதால் நன்றாக ஆடை உடுப்போம், பல்கலனும் ஆடை உடுப்போம், நாடு புகழும் பரிசினால் ஆடை உடுப்போம்

27-26 *கோவிந்தா உன்தன்னைப் பாடி ஆடை உடுப்போம்* கோவிந்தா, புண்டரீகாஷா! என்றவளுக்கு, வெகு தூரத்திலிருந்து கூரை சுரந்த நீ, அருகில் இருக்கும் எமக்கு ஆடை அளிக்காயோ!

27-27 *உடுத்துக் களைந்த உன் பீதக ஆடை உடுத்து* என்றல்லவோ இவளுடைய தந்தையும் அருளினார்.

உடுத்துக் களைந்த உன் பீதக ஆடை உடுத்து கலத்ததுண்டு
- பெரியாழ்வார், திருப்பல்லாண்டு
காறை பூணும் கண்ணாடி காணும்
தன்கையில் வளை குலுக்கும் கூறை உடுக்கும்
- பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி

27-28 இவனுடைய மாளாக்காதல் நாலைந்து அணிகலன்களை மட்டும் அணிவிப்பதால் தீருமோ? அத்தால் *பல்கலனும் யாம் அணிவோம்*.

பல பலவே ஆபரணம் பேரும் பல பலவே
பல பலவே சோதி வடிவு பண் பெண்ணில்
- திருவாய்மொழி 2-5-6
அபரிமித திவ்ய பூஷணா
- கத்யம்

27-29 *நெய்யுண்ணோம் பால் உண்ணோம்* என்று இந்நாள்வரை கிடந்த இவர்களுக்கு, அவன் நப்பின்னையுடன் சேர்ந்து அளித்ததை, அழகுக்காக அன்றி தங்கள் ஸ்வரூபம் ஸித்திக்க அணிந்தனர்.

27-30 *அதன் பின்னே பாற்சோறு மூட நெய் பெய்து*. உயர்ந்தவனை அடைந்ததாலே அவன் கொடுக்கும் வஸ்துக்களுக்கு அளவில்லை.

27-31 *பால் உண்ணோம், நெய் உண்ணோம்* என்று விரதத்தில் ஆழ்ந்த இவர்களைக் கண்டு கண்ணனும் உண்ணுவதை விலக்க, ஆய்ப்பாடியில் எல்லாம் மிஞ்சிக் கிடந்ததால் பாலாலேயே சோறாக்கி, அந்த சோறு எங்கே என்று தேடும்படி அது முழுதும் மறையும்படி நெய்யாலே மூடி.

நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும்
- பெரியாழ்வார் திருமொழி

என்றார் இவளுடைய தகப்பனாரும்.

27-32 அழகிலே மயங்கியவர், முழங்கையிலே வழிவதைக் காணார்.

முழங்கை வழிவார கையிலே சோறு எடுத்த இவர்கள் கண்ணனின் அழகைக் கண்டு மயங்கி நிற்க, கையிலிருந்து நெய் முழங்கை வரை வழிந்தோட, அந்நினைவே இல்லாது அவன் அழகிலேயே மயங்கி கிடந்தனர்.

27-33 உண்ண வந்த ரிஷி சோற்றை மறந்தான் என்ற கௌசிகனைப் போலே

இப்படித்தானே ராமனை எழுப்ப வந்த விசுவாமித்திரன் அவன் திருப்பள்ளி கொண்டு கண் வளரும்போது அந்த திவ்ய திருமேனி அழகில் மயங்கி ஸ்தம்பித்து நின்றான்

27-34 பசி தீர்ப்பது இவர்கள் நோக்கமன்று. கண்ணனை பாடி, அவனுடன் சேர்ந்து மகிழ்வதே *கூடி இருந்து*.

27-35 பிரிவாலே காய்ந்து வாடிய உள்ளம், சேர்த்தியாலே அவனைப் பாடி குளிர்ந்து மலர்ந்தது.

குளிர்ந்து அவனைப் பிரிந்த விரக தாபம் எல்லாம் தீரும்படி அவனிடம் ஒன்று சேர்ந்து (ஸம்ஸ்லேஷித்து). உன்தன்னை பாடி கூடி குளிர்ந்து.

27-36 மதி நிறைந்த நன்னாளிலே, குள்ளக் குளிர குடைந்து நீராடி, பாடி, கூடி, வருத்துமும் தீர்ந்து, மகிழ்ந்து, குளிர்ந்து என்பது எல்லாம் கண்ணன் எனும் நீர்வண்ண தடாகத்திலே மூழ்குவது.

இதுவரை வாக்யார்த்தம். மேலே ஸ்வாபதேசம்.

27-37 மோஷ தசையின் பரிபூர்ண ப்ரம்மானுபவத்தைச் சொல்வது இப்பாசுரம்.

27-38 க்ருதக்ருத்யரின் மோக்ஷானுபவம் கர்மபூமியில் மானஸீகம்.

செய்வன செவ்வன செய்து முடித்த க்ருதக்ருத்யரான ப்ரபன்னர்கள் மோஷ ப்ராப்தியில் எம்பெருமானை அடைந்து அனுபவிக்கும் இன்பத்தை, மனஸ்ஸாலே நினைத்து மகிழ்ந்து, இப்பிரகிருதி மண்டலத்தில் மீதி நாட்களை கழிக்கிறர்.

வன்பற்றுடன் மயல் பூண்டு மற்றோர் கதியால் இன நாள்
என் பெற்றது பெறும் தானமும் எத்தனை போதும் உளதாம்
துன்பற்ற தன் துணிவால் துயர் தீர்க்கும் துழாய் முடியான்
இன்புற்ற நல் வழியால் ஏற்றும் நற்பதம் எண்ணுவமே
ஸ்வாமி தேசிகன், பரமபத ஸோபானம் 16

27-39 **கல்யாண நாளை எண்ணி களித்திருக்கும் காளை போலே, க்ருத க்ருத்யர் வைகுண்ட போகத்தை எண்ணி காத்திருப்பர்.**

பின்பு வரும் கண்ணாலத்துக்கு நாள் எண்ணி இருக்குமாப் போலே
ஸ்வாமி தேசிகன், கதிவிசேஷாதிகாரம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்

ஏறி எழிற்பதம் எல்லா உயிர்க்கும் இதம் உகக்கும்
நாறு துழாய் முடி நாதனை நண்ணி அடிமையினம்
கூறு கவர்ந்த குருக்கள் குழாங்கள் குரைகழற் கீழ்
மாறுதல் இன்றி மகிழ்ந்து போகத்து மன்னுவமே
- ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்க்ரஹம் 29, பர்பூர்ண ப்ரஹ்மாநுபவ அதிகாரம்

பரமாத்மா சேதனர்களின் அல்பமான உபாயத்தாலே மகிழ்ந்து பெறும்பேற்றை அளிக்கிறார் அந்த உயர்ந்த பரமபதத்தை அடைந்து ஆசாரியர்களுடைய திருவடிக்கீழ் அடங்கி நின்று இடையிலா பகவத் அனுபவத்தைப் பெற்று மகிழ்வோம்.

27-40 **"அடியாருடன் அநவரதம் அடிமை செய்து ஆனந்திக்கும் நாள் என்று கொலோ" என எண்ணி காத்திருப்பதே ப்ரபன்னரின் உஜ்ஜீவனம்.**
குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 1-10

27-41 **ப்ரபத்தி என்பது ஜீவாத்மா பரமாத்மா விவாகம்**

பரஸமர்ப்பணம், சரணாகதி, ப்ரபத்தி, அடைக்கலம், ஆத்ம நிவேதனம் என்பது சேதனன் பரமாத்வாவை திருமணம் புரிவது போன்ற சடங்கு. அன்று முதல் பதிவ்ரதா தர்மத்தை தவறாமல் அனுஷ்டிக்க வேணும்.

27-42 **ஜீவனாகிய கன்னிகையை, ஆசாரியனாகிய தகப்பன் பகவான் எனும் பரமபுருஷனுக்கு கன்னிகாதானமாய் ஸமர்ப்பிக்கிறான்**

த3த்தா: ப்ரஜா ஜநகவத் தவ தே3ஶிகேந்த்3ரை:
ப்ரத்யாSபி4நத்3ய ப4வதா பரிணீய மாநா: |
மத்4யே ஸதாம் மஹித பே4ாக விசேஷ ஸித்3த்4தையை
மாங்க3ல்ய ஸூத்ரமிவ பி3ப்4ரதி கிங்கரத்வம் ||
- ஸ்வாமி தேசிகன், ஸ்ரீஶரணாகதி தீபிகா 30

ஜநக சக்கரவர்த்தி ஸீதா பிராட்டியை ராமனுக்கு கன்னிகாதானம் செய்து கொடுதாற்போலே நம்முடை ஆசாரியர்கள் எல்லாம் நம்மை அந்த ஸ்ரீயப்பதிக்கு திருமணம் செய்விக்கின்றனர்.

27-43 **சீர் என்பது அஸேங்க்2யேய கல்யாண கு3ணக4ணாம்.**

பகவானின் எண்ணற்ற திருக்கல்யாண குணங்களின் கூட்டம். சீர் ஒன்று தூப்புல் திருவேங்கடம் உடையான் என்று ஸ்வாமி தேசிகனை ப்ராத்திப்பது போலே

27-44 **கோவிந்தா என்று ரக்ஷகனை அழைத்தாள்.**

என்ற திருநாமத்தால் எம்பெருமானின் ஜகத் ரக்ஷகத்தை சொல்லி அழைப்பது. அவனுடைய கல்யாண குணங்களால்தான் உலகத்துக்கு ரக்ஷகத்வம்

27-45 **சீர்கோவிந்தன் தன்னுடன் கூடாதவரையும் ஆட்கொள்கிறான்.**

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா எம்பெருமான் தன் திருக்கல்யாண குணங்களால் தன்னோடு கூடாதவரை வெல்கிறான்.

27-46 **கூடாமைக்கு காரணம் சரீர ஆத்ம ப்ரமம், ஸ்வதந்த்ர ஆத்ம ப்ரமம்.**

பகவத் ப்ராப்த்திக்கு விரோதி இரண்டு. சரீரத்தையே ஆத்மா என எண்ணி மயங்குவது. தன்னுடைய அத்மாவை சுதந்திரன் பகவானுக்கு அதீனமானது இல்லை என்னும் விபரீத எண்ணம். இவை எம்பெருமானைப் பற்றிய ஞானத்தை அழிக்கிறது.

கிம் தேந ந க்ருதம் பாபம் சோரணா ஆத்ம அபஹாரிணா ||
பாரதம் உத் 42-35

பகவானுக்கு சொந்தமான ஆத்மாவை எவன் தனக்கு சொந்தமாக நினைக்கிறானோ அவன் ஆத்மாவை திருடியவன். அவனால் செய்யப்படாத பாபம் ஒன்றும் இல்லை.

27-47 **கூடாதார் நாலு வகை. - அறியாதவன், இழிந்தவன், இழந்தவன், வெறுப்பவன் - என்றான் கீதாசாரியன்.**

ந மாம் து$_3$ஷ்கிருதிநோ மூட$_4$ா: ப்ரபத்$_3$யந்தே நராத$_4$மா: |
மாயயா அபஹ்ருத ஜ்ஞாநா: ஆஸுரம் ப$_4$ாவம் ஆஶ்ரிதா: ||
பகவத் கீதை 7-15

என்னை வழிபடாதவர் மூடர், நராதமர், ஞானம் இழந்தவர், அசுரத்தன்மை கொண்டவர் எனும் நால்வர். இவர்கள் தாழ்ச்சி முறையே அதிகமாய் இருக்கும்.

27-48 **இவரில் மூடனை அழகால் திருத்தினான்.**

மூடர் என்பவன் பகவானை மதியாது இழிவான செயல்கள் செய்பவன். மூடரை தன் அழகை காட்டித் திருத்துகிறான். பிள்ளை உறங்காவில்லி தாஸர் சரித்திரத்தில் இதைக் காணலாம்

27-49 **நராதமன் பிறந்து கெட்டவன். அவனை நீர்மையால் திருத்தினான்**

நரர்களில் அதமன் நராதமன். பகவானின் பரத்வத்தை அறிந்து அவன் ஸௌலப்யத்தை தெரியாது ஞானம் பிறந்து கெட்டவன் நராதமன். பகவானனை விட்டு விலகிய அவனை எம்பெருமான் தன் ஸௌஸீல்ய குணத்தைக் காட்டி வெல்கிறான்.

27-50 **நீர்மையாவது நீரந்த்ரேண ஸம்ஸ்லேஷம்.**

மஹதோ மந்தை: ஸஹ நீரந்த்ரேண ஸம்ஶ்லேஷ ஸ்வபாவத்வம்
- ஶ்ருதர்ஸன பட்டர், ஶ்ருதப்ப்ரகாசிகை

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னது இரங்கி
மற்றவர்க்கு இன்னருள் சுரந்து
- திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 5-8-1

உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு ப்ரதிபலன் நோக்காது, தானே வலிய வந்து பழகும் குணம். உத்தம புருஷனான பகவான் பரம நீசர்களாகிய நம்மிடம் நீரந்த்ரேண ஸம்ஸ்லேஷம் செய்வது ஸௌஸீல்யம். இது நீர்மை.

27-51 *"நிஷாதாநாம் நேதா கபிகுலபதி காபி சபரி குசேல குப்ஜா ஸா"* என்ற இடங்களில் எம்பெருமானின் ஸௌஸீல்யம் பிரஸித்தம்.

நிஷாத ₃ாநாம் நேதா கபி குல பதி: காபி ஶப₃ரீ
குசேல: குப்₃ஜா ஸா வ்ரஜ யுவதயோ மால்ய க்ருதி₃தி |
அமிஷாநாம் நிம்நத்வம் வ்ருஷகி₃ரி பதேருந்நதிமபி
ப்ரபூ₄தை: ஸ்ரோதோபி₄: ப்ரஸப₄மநுகம்ப ஸமயஸி ||
ஸ்வாமி தேசிகன் தயா ஸதகம் 65

27-52 *வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினால் அருள் செய்து* என்று ஞானம் இழந்தோர்க்கு, சாஸ்திரத்தைத் தந்தான்.

ஸக்ஷாத் காருண்ய சாஸ்த்ர பாணினா

கலைகளும் வேதமும் நீதி நூலும்
*கற்பமும் சொற்பெருள் தானும் * மற்றை*
நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும்
நீர்மையினால் அருள் செய்து
- திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி 2-8-5

என்று சாஸ்திரங்களை தந்து அவர்களை வெல்கிறான்.

27-53 *கிருஷ்ணம் வந்தே ஜகத் குரும்* என்று தானேயும் *பீதகவாடை பிரானார் பிரம குருவாகி வந்து இருள் அனைத்தும் மாற்றும்* ஆசாரிய முகமாகவும் சாஸ்திரத்தை தந்தான்.

பீதக ஆடை பிரானர் பிரம குருவாகி
என்று இழந்த ஞானத்தை ஆசாரியர் வழிமுறையாய் கொடுத்து அருளுகிறான்.

ஏற்றி மனத்து எழில் ஞான விளக்கை இருள் அனைத்தும்
மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான்
ஸ்வாமி தேசிகன் அதிகார சங்கிரகம் 38

27-54 *"ஹதாந் யேகேந ராமேண மாநுஷேண"* என்கிறபடி அஸுரரை தன் பராக்கிரமத்தால் வெல்கிறான்.

சதுர்த்த₃ ச ஸஹஸ்ராணி ராக்ஷஸாம் பீ₄மகர்மணாம்

ஹதாந் யேகேந ராமேண மாநுஷேண பதஸ்ாதிதா
- ராமாயணம் ஆ 26-35
பயங்கரமான பதினாலாயிரம் ராக்ஷஸர்கள் தரையில் தனித்து நிற்கும் மனுஷ்யனான ராமனாலே கொல்லப்பட்டனர்

27-55 கூடாரை வெல்லும் சீர் கோவிந்தன் **கூடுவரிடம் தோற்கிறான் இதை பீஷ்மர் பக்கலில் காணலாம். ஆஸ்ரித பாரபக்ஷம் என்பது இவனுடைய அஸாதாரண குணம் அன்றோ!**

தன்னை ஆஸ்ரயித்த பீஷ்மரின் வார்த்தையை மெய்யாக்க "ஆயுதம் தொடேன்" என்ற தன் ப்ரதிஞ்ஞையை மீறி சக்கராயுதத்தை எடுத்தவன்.

கண்ணிநுண் சிறுத்தாம்பினால்
கட்டுண்ணப் பண்ணிய பெருமான்
தானே தன்னை கட்டுப்படும்படி அமைத்துக் கொண்டவன்.

சரணாகதனான சுக்ரீவனுக்காக வாலியை மறைந்து இருந்து தொலைத்தவன்.

27-56 பாடிப் பறை. **ப்ரபத்தியை அனுஷ்டித்து மோஷ ப்ராப்தியை யாசிப்பது**

பரதத்வமான எம்பெருமானிடம் சரணாகதி செய்வது பாடுவது. புருஷார்த்த பலனை சொல்வது பறை. பரம காருணீகனான பகவானிடம் ஆத்ம ஸமர்ப்பணம் செய்தவர் அவனிடம் மஹா விசுவாசம் கொண்டு அபராதம் இல்லாத கைங்கர்யம் செய்து வாழ்நாளை கழிப்பர்.

27-57 **வேதங்கள் எவன்** ஜகத்காரணகன், ஸர்வஞ்ஞன், ஸர்வ ஸமர்த்தன், ஸர்வ சக்தன், மோக்ஷப்ரதன், ஸமஸ்த கல்யாண குணாகரன் - ஹேய குண ரஹிதன், அப்ரமேயன், ஒத்தார் மிக்கார் இலாதான், ஸஹஜ ஹ்ருதயனோ அவனே பரமாத்மா **என்றது. இந்த பத்து பெருமைகளும் பொருந்தியவன் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே. அதனால் அவனிடம் பர ஸமர்ப்பணம்.**

ஸமர்த்தே ஸர்வஞ்ஞே ஸஹஜஸுஹ்ருத் ஸ்வீக்ருத பரே
ஸ்வாமி தேசிகன், ரஹஸ்யத்ரய ஸாரம், க்ருத்க்ருத்யாதிகாரம்

ரக்ஷண ஸமர்த்தன் *நித்ய ஸம்ஸாரிகளை நித்ய ஸூரி கோஷ்டியில் சேர்க்கிறான்*
ஸர்வஜ்ஞன் - *ஆஸ்ரிதரின் அநிஷ்ட நிவ்ருத்தி, இஷ்ட ப்ராப்தி இரண்டையும் அளிக்கிறான்.*
ஸஹஜஸுஹ்ருத் *சரணாகதரின் மனத்தை அறிந்து அருளும் நல்ல எண்ணம் உடையவன். தன்னுடைய மோக்ஷ ஸ்தானத்தை தன்னைப்போல் எல்லோரும் அடைந்து அனுபவிக்க வேணும் என்ற நல்ல இதயம் படைத்தவன்.*
ஸ்வீக்ருத ப்ரே - *நம்மால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஆத்மாவை ஏற்கிறான்*

27-58 *நாராயணனே நமக்கே பறை* **என்று முதல் பாட்டிலே சொன்ன ப்ரபன்ன கோஷ்டியே இங்கே யாம் என்றது.**

முதல் பாசுரத்திலே ப்ரபத்தி செய்தவர்களுக்கு. இன்று இங்கே சன்மானம்

27-59 *யாம் பெறும் சம்மானம்.* **என்பது** *"பொன்னுலகு ஆளிரோ புவனி முழுதும் ஆளிரோ"* **என்றிருக்கும்.**

பொன்னுலகு ஆளிரோ புவனி முழுதும் ஆளிரோ
நம்மாழ்வார், திருவாய்மொழி 6-8-1
என்கிறபடி இப்பிரபன்னர்களுக்கு பகவான் எல்லாவிதமான சம்பத்துக்களும் அருளுகிறான்.

27-60 **அந்த சம்மானம்** *நாடு புகழும் பரிசு. உடனாய் மன்னி வழுவிலா* **அடிமை செய்யும் பேறு. இரு விபூதியும் வியக்கும் செல்வம்.**

ப்ரபன்னனுக்கு கிடைத்த பரிசு அளவற்றது. அரியது. எத்தனை கோடி யுகங்கள் பக்தி யோகம் செய்து இன்னமும் மோக்ஷம் ஸித்திக்கவில்லையே என்று கிடக்கும் ரிஷிகள், மற்றோர்கள் இப்பிரப்பன்னனுக்கு கிடைத்த சம்மானத்தைக் கண்டு ஆதிசயிக்கிறர்.

மோக்ஷ சாம்ராஜ்யத்தில் உள்ள முக்தர், நித்யர் எல்லோரும் நம்முடன் கூடி இருந்து குளிர்ந்து என்று பகவத் கைங்கர்யம் செய்ய இப்பிரப்பன்னன் வருகிறானே என்ற மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்.

27-61 தவறி விழுந்த குழந்தையை எடுக்க, தானே கிணற்றில் குதிக்கும் தகப்பனைப்போலே, பிராணன் பிரிகையிலே பகவான் தானே முக்தாத்மாவை ப்ரம்ம நாடி வழியாய் கிளப்பி விசேஷமான ஸூஷ்ம சரீரத்தையும் அருளுகிறான்.

*முன் கருவி ஈரைந்தும் மனத்தில் கூட்டி *
முக்கியமாம் மருத்தில் அவை சேர்த்து * எல்லா
நன்கு உணரும் உயிரினில் சேர்த்து * ஐம்பூதத்தை
நண்ணுவித்து தான் தன்பால் வைக்கும் நாதன்*

- ஸ்வாமி தேசிகன், பரமபத்சோபானம் 13

மரணத்தின்போது 10 இந்திரியங்களும் போய் மனஸ்ஸில் அடங்கி, அது ப்ராணனில் அடங்கி, அதுவும் ஜீவாத்மாவில் அடங்குகிறது. அந்த ஜீவனை அந்தர்யாமியான எம்பெருமான் அணைத்துக் கொள்கிறான். இது இறக்கும் எல்லோருக்கும் பொது.

ஆனால் முக்தாத்மாவிற்கு இன்னும் சில விசேஷங்கள் செய்கிறான். பகவானே காரணமாய் நிற்கிறான். யமபடர்கள் வருவதில்லை. முக்தாத்மாவை அணைத்துக் கொண்டு அதற்கு ஸூக்ஷ்ம நாடியை காண்பித்து, தானே வெளியேற்றுகிறான். சூரிய கிரணங்கள் போல் ஸூக்ஷ்ம சரீரத்தை தருகிறான்.

27-62 மூர்தந்ய நாடியே முக்கியமாம் மோஷத்திற்கு வழி

*ஶதம் ச ஏகா ச ஹ்ருத3யஸ்ய நாட்3ய:
தாஸாம் மூர்த்த4நம் அபி4 நிஸ்ஸ்ருதைகா |
தயோர்த்4வமாயந் அம்ருதத்வமேதி
விஷ்வங்ங்ந்யா உத்க்ரமணே ப4வந்தி ||*

சாந்தோக்ய உபனிஷத் 8-6-6

இதயத்தை சுற்றி நூறும் ஒன்றுமாய் உள்ள நாடிகளில் ஒன்று உச்சந் தலையை நோக்கி போகிறது. அந்நாடி வழியே செல்லும் ஆத்மாவிற்குத்தான் மோக்ஷம். மற்றவைக்கு ஸம்ஸாரம். இதை மூர்த்ந்ய நாடி, ப்ரம்ம நாடி, ஸூஷ்ம நாடி, தலை வாசல் என்பர்.

27-63 முக்தாத்மா வன்சிறையின் தலை வாசல் வழியே வெளியேறும்.

முக்தனுக்கு சிறப்பு என்னவெனில் உயிர் நீங்கும்போது, 101ஆன மூர்தந்ய நாடி, ப்ரம்ம நாடி வழியாய் அவனுடைய ஆத்மா வெளிக் கிளம்புகிறது. மற்றவர்களுடைய ஆத்மா மீதி உள்ள 100 நாடிகளில் வழியே ஸ்வர்க்கம் போன்ற இடங்களுக்கு போகிறது.

*ஒன்பதுடன் வாசல் இரண்டு உடைத்தாய் * உள்ளே*
*ஒரு கோடி துயர் விளைவிக்கும் உடம்பாய் ஒன்றும் **
*வன்சிறையின் தலை வாசல் திறந்து * நம்மை*
வானேறும் வழிப்படுத்த மனமுற்றானே

- ஸ்வாமி தேசிகன், பரமபத்சோபானம் 13

11 துவாரங்கள் - கண் 2, காது 2, மூக்கு 2, வாய் 1, மலஜல துவாரம் 2, நாபி 1, உச்சி 1.

27-64 **அநாதியாய் அழுத்தும் விலங்கைக் கழற்றி, வான் ஏறும் வழி கண்டான் ப்ரபன்னன்.**

புண்யம் என்பது பொன் விலங்கு, பாபம் என்பது இரும்பு விலங்கு. இரண்டும் கர்மாவில் தள்ளும். அவற்றை விலக்கி.

இருவினை விலக்கி சிறை மீட்டி
*உச்சித்துளை வழியே உயிர் எடுத்து **
*மறுபிறவி தொலைய வான் வழி கண்டு **
ஆவி அமரருடன் கடந்து /
*விண் சென்று தன்னியல் அறிந்து **
*அகலா அடிமை செய்வதும் **
*தன்நிகரில்லா பெருமகள் உறையும் **
அத்திகிரியான் திருவருளே.

- நெஞ்சில் அஞ்சு 9

என்று நெஞ்சில் அஞ்சில் சொன்னோம்.

27-65 **ப்ரபன்னனின் மரணத்திற்கு கால, தேஸ, அந்திம ஸ்மிருதி போன்ற நியமங்கள் இல்லை**

*நன் நிலமாம் அது * நல் பகலாம் அது நல் நிமித்தம் **
*என்னலும் ஆம் அது * யாதானுமாம் அங்கு அடியவர்க்கு /*
*மின் நிலை மேனி விடும் பயணத்து * விலக்கு இலதோர் **
*நல் நிலையாம் நடு நாடி வழிக்கு * நடை பெறவே*

- ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹம் 27 (நிர்யாணாதிகாரம்)

ப்ரபன்னனின் மரணத்திற்கு காலம், தேஸம் போன்ற நிமித்தங்கள் தேவையில்லை. இறுதி நினைவும் அவசியமில்லை.

27-66 **வைகுந்தத்து வழியில் வழங்கும் உபசாரங்களை முக்தாத்மா ஸூக்ஷ்ம சரீரத்துடன் (நுண்ணுடலுடன்) ஏற்கிறது**

மோஷம் அடைவதற்கு ஸூக்ஷ்ம சரீரம் அவசியம். வைகுண்டம் செல்லும் வழியில் நடக்கும் உபசாரங்களைப் பெற ஆத்ம ஸ்வரூபம் மட்டும் போதாது. சரீரத்தைக் கொண்டுதான் அனுபவிக்க முடியும். தேவர்கள் தாம் அடைந்த யாக பலன்களுக்கு காணிக்கை ஸமர்பிக்கின்றனர்.

27-67 **திருநாடு செல்கையிலே பேரொலியும், பெருமகிழ்ச்சியும், ஆரவாரமும், அருங்காட்சியும். ஸகலமும் வாசியற** வாழ்புகழ் நாரணன் தமரான ப்ரபன்னனைக் **கண்டு உகக்கின்றன.**

சூழ் விசும்பு அணிமுகில் * தூரியம் முழக்கின *
ஆழ் கடல் அலை திரைக் * கை எடுத்து ஆடின /
ஏழ் பொழிலும் * வளம் ஏந்திய என்னப்பன் *
வாழ்புகழ் நாரணன் * தமரைக் கண்டு உகந்தே
- நம்மாழ்வார், திருவாய்மொழி 10-9-1

மேகங்களில் வாத்யங்கள் ஒலிப்பது என்பது இந்திரன், வருணன் போன்றோர் மகிழ்ச்சியை தெரிவிப்பது. எமக்கு ஸ்வாமிகள் என்று எல்லோரும் தலை வணங்குவது.

நாரணன் தமரைக் கண்டு உகந்து * நன்னீர் முகில் *
பூரண பொற்குடம் * பூரித்தது உயர்விண்ணில் /
நீரணி கடல்கள் * நின்று ஆர்த்தன * நெடுவரைத்
தோரணம் நிரைத்து * எங்கும் தொழுதனர் உலகே
- நம்மாழ்வார், திருவாய்மொழி 10-9-2

27-68 **மஹரிஷிகள், பிரம்மவித்துக்கள் வியந்து சம்மானம் பெற்ற இப்பிரபன்னனை ப்ரகிருதியில் வணங்குகின்றர்.**

தொழுதனர் உலகர்கள் * தூபம் மலர்மழை
பொழிவனர் * பூமி அன்று அளந்தவன் தமர் முன்னே /
எழுமின் என்று இருமருங்கு இசைத்தனர் * முனிவர்கள் *
வழி இது வைகுந்தர்க்கு என்று * வந்து எதிரே
- நம்மாழ்வார், திருவாய்மொழி 10-9-3

தாம் செய்யும் பக்தி யோகம் இன்னும் கைகூடவில்லையே, ஆனால் நேற்று வரைக்கும் பாபாத்மாவாய் இருந்த இவன் இந்த ப்ரபத்தி மூலமாய் உயர்ந்த பதவிக்கு செல்கிறானே என்று ஆச்சரியப்படுகின்றனர் ஸனனகர் போன்ற மஹரிஷிகள்,

27-69 அகலகில்லேன் இறையும் என்றவளைக் கொண்டு அடைக்கலம் அடைந்த அடியவனை, அலங்கார பந்தல் கொண்டு அமரர்கள் அழைத்தனர்.

எதிர் எதிர் இமையவர் * இருப்பிடம் வகுத்தனர் *
கதிரவர் அவர் அவர் * கைந் நிரை காட்டினர் /
அதிர்குரல் முரசங்கள் * அலைகடல் முழக்கொத்த *
மதுவிரி துழாய்முடி * மாதவன் தமர்க்கே
- நம்மாழ்வார், திருவாய்மொழி 10-9-4

பூர்ண கும்பம், விளக்கு, கீதங்கள், பூமழை பொழிதல் போன்ற காரியங்களை செய்கின்றனர் வானவர்கள்.
வைஷ்ணவர்களை ஸம்ஸாரிகள் வெறுப்பர் என்று நம்பிள்ளை ஈட்டில் மிளகாழ்வானுக்கு அரசன் நீர் வைஷ்ணவன் உமக்கு பரிசு தேவையில்லை என்பதை சொல்லிக் காட்டுகிறார்.

27-70 ஆதிவாஹிகர்கள் அதி உபசாரத்துடன் அப்பிரபன்னனை வழி நடத்திச் செல்கின்றனர்,

ஆதிவாஹிகா: தல்லிங்காத் ||
- ப்ரமம் சூத்திரம் 4-3-4

ஆதிவாஹிகர்கள் முக்தனை அதிவஹிப்பதற்காக பகவானால் நியமிக்கப்பட்டவர்கள். அக்னி போன்றோர் ஆதிவாஹிகர்கள்.

27-71 அக்னி முதல் ப்ரஜாபதி வரை பன்னிருவர் ஆதிவாஹிகர்.

நடை பெற அங்கி பகல் ஒளி நாள் உத்தராயணம் ஆண்டு
இடை வரு காற்று இரவி இரவின்பதி மின் வருணன்
குடையுடை வானவர்கோன் பிரஜாபதி என்று இவரால்
இடை இடை போகங்கள் எய்தி எழிற் பதம் ஏறுவரே
- ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்க்ரஹம் 28 (கதி விசேஷாதிகாரம்)

ஸூக்ஷ்ம சரீரத்துடன் வைகுண்டம் நோக்கிச் செல்லும் ஜீவனை வழியில் பல பேர் வழி காட்டி கௌரவிக்கிறர் - அக்னி, பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம், வருஷம், வாயு, சூர்யன், சந்திரன், மின்னல், வருணன், இந்திரன், ப்ரஜாபதி. இவர்கள் எல்லாம் அபிமானி தேவதைகள்.

27-72 அர்சி: முன் நின்று நடத்துவதால் அது அர்ச்சிராதி மார்க்கம்

அர்ச்சிஷமேவாபி$_4$ ஸம்ப$_4$வந்தி அர்ச்ச்சிஷோSஹ:
அஹ்ந ஆபூர்யமாண பக்ஷம்

- சாந்தோக்ய உபனிஷத் 4-15-5

முக்தர்கள் அர்ச்சிராதி அபிமானி புருஷனையே அடைகிறர். அவனிடமிருந்து அஹரபிமானியிடமும் அவனிடமிருந்து சுக்லபக்ஷ அபிமானி தேவதையிடத்தும் அடைகிறார்கள்.

அக்3நிர் ஜ்யோதிரஹ: ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம் |
தத்ர ப்ரயாதா க3ச்ச2ந்தி ப்3ரஹ்ம ப்ரஹ்மவிதே3ா ஜநா: ||

- பகவத் கீதை 8-24

அக்னியாகிய ஜ்யோதிஸ், பகல், சுக்ல பக்ஷம், உத்தராயணம், இவரின் அபிமானி தேவதை எந்த வழியில் இருக்கிறாரோ அந்த வழியில் செல்லும் ப்ரம்மவித்துக்கள் ப்ரம்மத்தை அடைகிறார்கள்.

வான் ஏற வழி தந்த * வாட்டாற்றான் பணிவகையே *
நான் ஏறப் பெறுகின்றேன் * நரகத்தை நகு நெஞ்சே /
தேன் ஏறு மலர்த்துளவம் * திகழ்பாதன் * செழும் பறவை
தான் ஏறித் திரிவான்தன் * தாளிணை என் தலைமேலே

- திருவாய்மொழி 10-6-5

திருவட்டாறு எம்பெருமான் எனக்கு அர்ச்சிராதி மார்க்கத்தை தந்தான் என்கிறார். அதனா;ல் நரகம் போன்ற இந்த ஸம்ஸாரத்தை பார்த்து நகைக்கின்றேன்.

27-73 **ஆதிவாஹிகர் அவரவர்தம் எல்லைவரை வந்து வழி அனுப்பினர்.**

கந்த்ரூணாம் கமயிதார: - செல்பவர்களை வழிநடத்துபவர்கள். ஷோடசோபசாரங்களை ஸம்ர்பித்து அவர் அவர் எல்லை வரை வந்து மற்ற இடத்துக்கு செல்லும்படி கௌரவிக்கின்றனர்.

27-74 **ஶ்ரியபதியின் அடியவனான இவனை, வருண இந்திர ப்ரஜாபதிகள் அழைத்து, ஆதரத்துடன் தம் யக்ஞ, யாகாதி கர்ம ஆராதனைகளை இவன் திருவடியில் இட்டனர்.**

மாதவன் தமர் என்று * வாசலில் வானவர் *
போதுமின் எமதிடம் * புகுதுக என்றலும் /
கீதங்கள் பாடினர் * கின்னரர் கெருடர்கள் *
வேதநல் வாயவர் * வேள்வியுள் மடுத்தே

- நம்மாழ்வார், திருவாய்மொழி 10-9-5

27-75 **ஆதிவாஹிகர் ஆழியானின் அடியவருக்கு தம்முடைமைகள் அனைத்தும் அளித்தனர். இது அவர் ஸ்வரூபத்திற்கு பாங்கு.**

வேள்வியுள் மடுத்தலும் * விரைகமழ் நறும்புகை *
காளங்கள் வலம்புரி * கலந்து எங்கும் இசைந்தனர் /
ஆள்மின்கள் வானகம் * ஆழியான் தமர் என்று *
வளொண் கண் மடந்தையர் * வாழ்த்தினர் மகிழ்ந்தே
- நம்மாழ்வார், திருவாய்மொழி 10-9-6

நீசரோடு பரிபவப்பட்டவன் பகவத் ஸம்பந்தம் காரணமாக உடலை விட்டு பிரிந்தவுடனே உயர்ந்த தேவர்களாலும் கொண்டாடப்படும்படி அன்றோ உள்ள பேறு (நம்பிள்ளை ஈடு)

27-76 முக்தனுக்கோ அவை துச்சம். இது இவன் ஸ்வரூபத்திற்கு பாங்கு.

வேதே3ஷு யஜ்ஞேஷு தப:ஸு சைவ
த3ாநேஷு யத் புண்ய ப2லம் ப்ரதி3ஷ்டம்
அத்யேதி தத் ஸர்வமித3ம் விதி3த்வா
யோகீ3 பரம் ஸ்தா2நமுபைதி சாத்3யம்
- பகவத்கீதை 8-28

முக்தனானவன் இந்த ரஹஸ்யத்தை தத்வரீதியாக அறிந்து வேதாத்யயனத்திலும், யாகத்திலும், தவத்திலும், தானத்திலும் எல்லாம் என்ன பலன் சொல்லப்பட்டிருகிறதோ அவற்றை எல்லாம் சந்தேகமின்றி தாண்டி நித்யமான பரமபதத்தை அடைகிறான்.

27-77 ஆதிவாஹிகர்களால் அர்ச்சிராதிமார்கத்தில் முக்தனுக்கு மோஷம்.

விழி அல்லால் வேல் இல்லை விண்ணின் மாதர்
மேனி அல்லால் வில் இல்லை மீனவற்கு
மொழி அல்லால் அமுதில்லை என்று முந்நாள்
முத்தி வழி முனிந்து அடைந்த மோகம் தீர்ந்தோம்
கழி அல்லால் கடல் இல்லை என்பார் போல
காரியமே காரணம் என்று உரைப்பார் காட்டும்
வழி அல்லா வழி எல்லாம் கடந்தோம் மற்றும்
வான் ஏறும் வழி கண்டோம் மகிழ்ந்திட்டோமே
- ஸ்வாமி தேசிகன், பரமபத ஸோபானம் 15

அமரர்கள் தொழுது எழ அலைகடல் கடைந்தவன் தன்னை
அமர்பொழில் வளங்குருகூர்ச் சடகோபன் குற்றேவல்
அமர்சுவை ஆயிரத்து அவற்றினுள் இவை பத்தும் வல்லார்
அமரரோடு உயர்வில் சென்று அறுவர்தம் பிறவியஞ்சிறையே
- நம்மாழ்வார், திருவாய்மொழி 1-3-11

அமரரோடு உயரச் சென்று என்று ஆதிவாஹிகர்களோடு செல்வதைச் சொன்னது

அர்ச்சிராதிநா தத்ப்ரதிதே: ||
- ப்ரம்ம சூத்ரம் 4-3-1
உபாஸகன் உயிர் இழந்த பிறகு அர்ச்சிராதி மார்க்கமாகச் செல்கிறான்.

27-78 **அர்ச்சிராதி மார்க்கம் ஸ்ரேயஸ். தூமாதி மார்க்கம் ப்ரேயஸ்.**

சுக்லம், தேவயானம் என்று அழைக்கப்படும் அர்ச்சிராதி மார்க்கம் ப்ரம்மத்திடம் சேர்க்கும். கிருஷ்ணம். பித்ருயானம் என்று சொல்லப்படும் தூமாதி மார்க்கம் ஸம்ஸாரத்தைத் தரும்.

ஶுக்ல க்ருஷ்ணே க3தீ ஹ்யேதே ஜக3த: ஶாஶ்வதே மதே |
ஏகயா யாதி அநாவ்ருத்தம் அந்யயா ஆவர்ததே புந:
பகவத் கீதை 8-26
அர்ச்சிராதி மார்க்கம் சுத்தமானது. வெண்மையானது.
தூமாதி மார்க்கம் அசுத்தமானது. கரியது.
ஹி என்ற சொல் பிரபலமானதைச் சொல்லும். இங்கே உபனிஷத் ப்ரஸித்தத்தை சொல்கிறது. சுக்ல மார்கத்தில் செல்பவன் திரும்பி வருவதில்லை, அநாவ்ருத்தி.
கிருஷ்ண மார்கத்தில் செல்பவன் செல்லும் இடம் எல்லாம் அழியக் கூடியது. அவன் திரும்பி பூலோகத்துக்கே வருகிறான்.

27-79 **அர்ச்சிராதி மார்க்கம் ஒரு வழிப்பாதை. அங்கு சென்றவன் திரும்புவது இல்லை. அவன் கர்ம வஸம் ஆவதில்லை.**

ஏதேந ப்ரதிபத்யமாநா: இமம்
மாநவம் ஆவர்த்தம் நாவர்த்தந்தே
- சாந்தோக்ய உபனிஷத் 4-1
இவர்கள் மனுஷ்யர் வசிக்கும் உலகில் வந்து ஸம்ஸாரத்தில் உழல்வதில்லை

ஸ கல்வேவம் வர்தயந் யாவத3ாயுஷம்
ப்3ரஹ்மலோகம் அபி4 ஸம்பத்3யதே |
ந ச புநராவர்த்ததே |ந ச புநராவர்த்ததே ||
- சாந்தோக்ய உபனிஷத் 1-15-1

முக்தன் தன் சரீரம் போகும்வரை வாழ்ந்து அது போன பின், ப்ரம்மத்தின் லோகத்தை அடைந்து மறுபடியும் திரும்பி வருவதில்லை.

27-80 **உபனிஷத் அழைக்கும் அமானவன் என்னும் வித்யுத்புருஷன் நித்யன். மற்றவரைப் பற்றி பேதம்.**

ஆதிவாஹிகர்களில் மின்னல் தேவதை என்னும் அமானவன் நித்யஸூரி என்கின்றனர். மற்றவரில் யார் நித்யஸூரி, யார் ஸம்ஸாரி என்பதில் சர்ச்சை.

27-81 **அம்ருதமயமான விரஜா நதியில் மூழ்கி, ஸூக்ஷ்ம சரீரத்தை உதறி, முக்தன் ப்ரகிருதி ஸம்பந்தம் நீக்குகிறான்.**

ஸூக்ஷ்ம சரீரத்தை ஆறுகடக்கைக்குப் பற்றின தெப்பம் போகவிடுமாப் போலே போகவிடுத்து, விரஜைக்கு அக்கரைப்படுத்தி

ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய ஸாரம், கதிவிசேஷாதிகாரம்

27-82 **ப்ரபன்னன் தன் ஸங்கல்ப ஞானத்தால், விரஜையை கடக்கிறான்**

*பண்டை இரு வினை ஆற்றில் படிந்து * பாரம்*
*காணாதே ஒழுகிய நம் பாக்கியத்தால் **
*வண்டு அமரு மலர் மாதர் மின்னாய் மன்ன **
வைஜயந்தி மணிவில்லாய் விளங்க வான் சேர் /
*கண்டல் அருள் மழை பொழிய வந்தது ஒப்பாம் **
*குளிர்ந்து தெளிந்த அமுதாய விரஜை ஆற்றைக் **
*கண்டு அணுகி கருத்தாலே கடந்து * மீளாக்*
கரை கண்டோர் கதி எல்லாம் கதித்திட்டோமே

- ஸ்வாமி தேசிகன், பரம்பதஸோபானம் 17

எம்பெருமான் கரிய மேகம், பிராட்டி ஒரு மின்னல், வைஜயந்தி மாலை வானவில், பகவானின் கருணை என்பது மழை நீர், அதன் வெள்ளமே விரஜா நதி என்று வர்ணித்தார்.

27-83 **சதுர்புஜனாய், சங்க சக்கரதாரியாய், கோடி ஆதித்ய ப்ரகாசமாய், விரஜையின் அக்கரையில் உள்ள அமானவன் ஸ்பர்ஸத்தாலே முக்தனுக்கு திவ்யமான திருமேனி ப்ராப்தம்.**

ததஸ்து விரஜா நதிப்ரதே3ஶம் ஸ ஆக3ச்ச2தி விரஜாம் நதீ3ம்
தத்தோய ஸ்பர்ஶமாத்ரேண ஸூர்ய கோடி ப்ரதீகாஶ:

அமாநவம் ஸமாஸாத்₃ய

- கௌஷீகி உபனிஷத் 1-35

பிறகு விரஜா நதிக்கரை எட்டி அந்த முக்தன் விரஜை ஆற்றுக்கு வருகிறான். அந்நதியின் நீரைத் தொட்டவுடன் கோடி ஸூர்ய ஒளியுடன் நதிக்கரையில் இருக்கும் அமானவனை கிட்டுகிறான்.

27-84 அமானவன் முக்தனை பிரம்மத்திடம் கொண்டு சேர்க்கிறான்.

தத் புருஷா அமானவா ப்ரம்ம

- சாந்தோக்ய உபனிஷத்

ப்ரம்மத்திடம் அழைத்து செல்வதால் அமானவன் நித்ய ஸூரி.

27-85 முக்தனுக்கு ஸாலோக்ய, ஸாரூப்ய, ஸாமீப்ய, ஸாயுஜ்ய ப்ராப்தி. வைகுண்டம் இருக்கும் லோகம் ஸாலோக்யம். அப்ராகிருத திருமேனி அடைவது ஸாரூப்யம். ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமானுக்கு ஸமீபம் ஸாமீப்யம். பகவானைப்போல் ஆனந்தம் அடைவது, ஸமாநுகுண பாகித்வம் ஸாயுஜ்யம்.

27-86 ஐந்து நூறாக அழகிய பெண்கள் மாலை, மை, மணத்தூள், ஆடை, ஆபரணத்துடன் வரவேற்கின்றனர். இதுவே சூடகம், தோள்வளை, தோடு, செவிப்பூ, பாடகம்

தம் பஞ்ச ஶதாந்ய அப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி
ஶதம் மாலா ஹஸ்தா: ஶதம் அஞ்சந ஹஸ்தா:
ஶதம் சூர்ண ஹஸ்தா: ஶதம் வாஸோஹஸ்தா:

கௌஷீகி உபனிஷத் 1-35

27-87 முக்தனின் அபராகிருத திருமேனிக்கு ப்ரம்மாலங்காரம் செய்து பகவானைப் போல ஆக்குகிறர்.

தம் ப்₃ரஹ்ம அலங்காரேண அலங்குர்வந்தி

கௌஷீகி உபனிஷத் 1-35

27-88 பிரம்மத்தின் திருமேனி போலே மணம், ருசி, தேஜஸ், புகழ், ஞானமும் அளித்தனர். இதுவே சூடகம், தோள்வளை இத்யாதி.

தம் ப்ரஹ்ம கந்த: ப்ரவிஶதி ப்ரஹ்ம ரஸ: ப்ரவிஶதி
ப்ரஹ்ம தேஜ: ப்ரவிஶதி ப்ரஹ்ம யஶ: ப்ரவிஶதி
ப்ரஜ்ஞயாய விபஶ்யதி

27-89 *அபஹத பாப்மா* என்ற எட்டு குணங்களாகிய *பல்கலனும் யாம் அணிவோம்*

ய ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ
விஜிக4த்ஸோ அபிபாபஸ் ஸத்ய காம: ஸத்ய ஸங்கல்ப
- சாந்தோக்ய உபனிஷத் 8-7-1

பாவமற்றவன், மூப்பு, மரணம், துன்பம், பசி, தாகம் இல்லாதவன், வீணாத விருப்பத்தையும், ஸங்கல்பத்தையும் உடையவன்

27-90 *ஆடை உடுப்போம்*. கைங்கர்யத்திற்கு கருவிகளான கரண களேபரங்களை பெறுவோம். ஆடை உடுப்போம் பிறகு பல்கலனும் யாம் அணிவோம் என்று அந்வயம்

27-91 *கொண்டானை அல்லா அறியாக் குலமகள் போன்ற* ப்ரபன்னர்கள் வைகுண்டத்தை அடைகின்றனர்.

கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லாக் குலமகள் போல்
- குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி 5-2

அல்ப, அஸ்திர ஆசைகளைத் துறந்தவன் அனைத்துக்கும் மேலான ப்ரம்மத்தையே நித்யமாக அடைகிறான். உண்மையில் ப்ரபன்னனே பேராசை கொண்டவன். அந்த ஆசை என்பது நித்ய கைங்கர்யமான ஆனந்தத்தை வேண்டுவது

27-92 *பாற்சோறு மூட நெய் பெய்து*. இதுதான் ஸாமீப்யம். பகவான் எழுந்தருளியுள்ள பரமபதம் அருகில் செல்வது.

ஸ்ரீவைகுண்ட்ட திவ்ய நகராய நம:
ஸ்ரீவைகுண்ட்ட திவ்ய விமாநாய நம:
ஸ்ரீவைகுண்ட்ட திவ்ய மண்டபரத்நாய நம:
பகவத் ராமாநுஜர், நித்ய க்ரந்தம் - 13

வைகுண்ட்டம் என்னும் திவ்ய நகரத்திற்கும், திவ்ய விமாநத்திற்கும், திவ்யமான மண்டபத்திற்கும் வணக்கம்

27-93 திவ்யமான பர்யங்கத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருக்க, கதியற்றவருக்கு கதியான அவன் திருவடிகளைப் பற்றி முக்தன் ஏற எத்தனிக்க, எம்பெருமானும் மடியில் அமரும் மகனைபோல்

எண்ணித் தன் இரண்டு திருவடிகளின் கீழ் சேர்த்துக் கொள்கிறான்.

27-94 பரமபதநாதன் *கோஸி* என்க, முக்தன் *அஹம் ப்ரஹ்மாஸ்மி*, நான் உன்னைப் பிரியாதவன். வேதத்தில் அன்று கேட்டதை வியப்புடன் இன்று காண்கிறேன் என்றான்.

பகவான் நீ யார் என்று கேட்க, நான் உன்னைச் சேர்ந்தவன். உன்னைவிட்டு பிரியாத தத்துவம் என்கிறது முக்தன். அன்று சாஸ்திரம் சொன்னது. நீ ஆதாரம், நியாம்யன், ஸ்வாமி என்று, அதைக் கண்களால் காண்கிறேன் இன்று என்கிறான்.

அடல் உரகம் உண்டு உமிழ்ந்த அருக்கன் போல
அழுக்கடைந்து கழுவிய நல்தரளம் போல
கடல் ஒழுகிக் கரை சேர்ந்த கலமே போலக்
காட்டுத்தீ கலந்து ஒழிந்த களிறே போல
மடல் கவரும் மயல் கழிந்த மாதர் போல
வன்சிறைபோய் மன்னர்பதம் பெற்றார் போல
உடல் முதலா யுஇர் மறைக்கும் மாயை நீங்கி
உயர்ந்த பதம் ஏறி உணர்ந்து ஒன்றினோமே
ஸ்வாமி தேசிகன், பரமபத ஸோபானம் 19

27-95 அகமகிழ்ந்த எம்பெருமான், அவனுக்கு மீட்சியிலா வாழ்ச்சி அளிக்கிறான்.

முதன் முதலில் வார்த்தை பேசும் குழந்தை போலே எம்பெருமான் முக்தனின் வார்த்தை கண்டு மகிழ்கிறான்.

தனிக்கோலாய் தாமரையாள் இடம் கொண்டு திகழும் திருமாலே
உமக்கேயாய் அடியாரோடு பணி செய்யும் பேரின்பம் தருவாயே
விட்ட பயனை மறந்து மருளில் வீழ்ந்த என்னை மீட்டி ஆளும்
கிட்டி வந்து அருளும் உம் கருணைக் கடலே என்றும் காக்கும்.
நெஞ்சில் அஞ்சு - 10
என்று நெஞ்சில் அஞ்சில் சொன்னோம்.

27-96 *கூடியிருந்து குளிர்ந்து*. முக்தனும் பகவானும் ஸஹபோஜனம். அது ஸாயுஜ்யம்.

போக்யமான வஸ்துவை முக்தனும் எம்பெருமானுன் சேர்ந்து அனுபவிப்பது கூடி இருந்து குளிர்ந்து. அது ஸாயுஜ்யம். (காஷ்டிகை)

முக்தாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றாய், ப்ரமாத்ம ஸ்வரூபம், திருக்கல்யாண குணம் இவற்றை ஸமமாக அனுபவித்து ஆனந்தம் அடைகிறான். அனுபவத்தில் இவர்கள் இருவருக்கும் ஸாம்யம். ஜகத்வ்யாபரத்தில் இல்லை. அது எம்பெருமானுக்கே உரியது.

ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம |
யோ வேத3 நிஹிதம் கு3ஹாயாம் பரமே வ்யோமந் |
ஸோSஶ்நுதே ஸர்வாந் காமந் ஸஹ |
ப்3ரஹ்மணா விபஶ்சிதேதி ||
- தைத்ரிய ஆநந்தவல்லி 1-2

விகாரமற்றதால் ஸத்யமாகவும், ஞானமாகவும், அளவற்றதால் அநந்தமாவும் உள்ள ப்ரம்மத்தை இதய குகையில் உள்ளதாய் எவன் ஒருவன் பக்தி செய்கிறானோ அவன் மோக்ஷத்தில் ஸர்வஞ்ஞனான ப்ரஹ்மத்துடன் சேர்ந்து எல்லா திருக்கல்யாண குணங்களையும் அநுபவிக்கிறான்.

27-97 **இன்னமுத திருமகளுடன் இணைபிரியா எம்பெருமானை தினைத்தனையும் விடாது, அனுபவிப்பது** கூடி இருந்து குளிர்ந்து. **அறுசுவை உண்டியான அவனை ஸ்வரூப, ரூப, குண, விபூதிளோடு அனுபவிப்பது** ஸாயுஜ்யம்

எம்பெருமான்தான் ஷாட்குண்ய பரமான்னம், ஞான, பல ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ் என்பவை

பச்சை மாமலை போல் மேனி, பவள வாய், கமலச் செங்கண், அச்சுதா, அமரேறே, ஆயர்தம் கொழுந்தே
- தொண்டரடிப்பொடியாழ்வார், திருமாலை

கூறிய அறுசுவைப் பயனாயினை
- திருமங்கயாழ்வார், திருவெழுக்கூற்றிருக்கை.

ஷட் ரஸான்னம் - ஆறுசுவை அடிசில்

அறுசுவை அடிசில் என்கோ
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-4-5

மண்ணுலகில் மயல் தீர்ந்து மனம் தளும்பி
மன்னாத பயன் இகந்து மாலே அன்றி

கண் இலது என்று அஞ்சி அவன் கழலே பூண்டு
கடும் சிறை போய்க் கரை ஏறும் கதியே சென்று
விண்ணுலகில் வியப்பு எல்லாம் விளங்கக்கண்டு
விண்ணவர்தம் குழாங்களுடன் வேதம் பாடி
பண்ணுலகில் படியாத இசையில் பாடும்
பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே

- ஸ்வாமி தேசிகன், பரமபதசோபானம் 20

மண்ணுலகில் மயல் தீர்ந்து - விவேக பர்வம்
மனம் தளும்பி - நிர்வேத பர்வம்
மன்னாத பயன் இகந்து - விரக்தி பர்வம்
மாலே அன்றி கண் இலது என்று அஞ்சி - பீதி பர்வம்
அவன் கழலே பூண்டு - ப்ரஸாதந பர்வம்
கடும் சிறை போய் - உத்க்ரமண பர்வம்
கரை ஏறும் கதியே சென்று - அர்ச்சிராதி பர்வம்
விண்ணுலகில் வியப்பு எல்லாம் விளங்கக் கண்டு - திவ்யதேஸ ப்ராப்தி பர்வம்
விண்ணவர்தம் குழாங்களுடன் வேதம் பாடி
பண்ணுலகில் படியாத இசையில் பாடும்
பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே - ப்ராப்தி பர்வம்

27-98 பால் சோறு என்பது எம்பெருமான். அதில் மூட நெய் பெய்து முழங்கை வழிவார என்பது பரிபூர்ண ப்ரம்மானுபவம்.

27-99 மாம் ஏகம் என்று உபாய தசையிலே சிங்கம் போலே தனித்தும், கூடி இருந்து குளிர்ந்து என்று தலைமை யானை போலே உபேயத்திலே சேர்ந்திருப்பவன் எம்பெருமான்.

புலி, சிங்கம் போலே எம்பெருமான் உபாயமாகும்போது தன்னைத்தொடர்ந்த மற்ற உபாயங்களை பொறுக்க மாட்டான். தலைமை யானை எப்படி கூட்டத்துடன் போகங்களை அனுபவிக்குமோ அதுபோலே உபேய தசையில், பிராட்டிமார், நித்ய ஸூரிகளுடன் அனுபவிப்பான்.

தருவாய் வினை விடுத்து வீடு நான் கேட்கும்போது
விரைவாய் இன்றே இல்லை நாளையென விரும்பும்போது
அளித்து அழைப்பாய் உயரே உமக்கே குற்றேவல் செய்ய
களித்து இருப்பார் வந்தார் அவரோடு சேர்ந்து யான் உய்ய.

- இறுதியின் சுருதி 9

என்று இறுதியின் சுருதியில் சொன்னோம். **இருப்பார் -** நித்யஸூரிகள், **வந்தார்-** முன்னமே வந்த முக்தர்கள். இவர்களோடு சேர்ந்து உமக்கு நான் பணி செய்ய வேண்டு.

27-100 "எம்பெருமானுக்கு ஸேஷ பூதரான நீர் எமக்கு ஸ்வாமிகள்" **என நித்யரும் முக்தரும் வைகுந்தத்து வாசலில் இவனை வரவேற்கின்றனர்.**

பயிலும் திருவுடையார் எவரேலும் அவர் கண்டீர்
பயிலும் பிறப்புடைதோறும் எம்மையாளும் பரமரே
நம்மாழ்வார், திருவாய்மொழி 3-7-1

கடல் மல்லை தலசயனத் துறைவாரை
கொண்டாடும் நெஞ்சுடையார்
அவர் எங்கள் குல தெய்வமே
- திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 2-6-4

நித்யாபி$_4$ வாஞ்சி$_2$த பரஸ்பர நீச ப$_4$ாவை:
மத் தை$_3$வதை: பரிஜந ஸ்தவ ஸங்க$_3$ஸீய:
- கூரத்தாழ்வான், வைகுண்ட ஸ்தவம் 77

முக்த தசையிலும் பாகவத ஸேஷத்வம் காண்பது, அனுபவிப்பது, அனுஸந்திப்பது ஸ்வாபாவிகம். எப்போதும் ஒருவருக்காருவர் அடிமையாய் இருப்பதை ஆசைப்படுபவர்களும், நான் பூஜை செய்யும்படியானவரும், உம்முடன் எப்போதும் கூடி இருக்கும் நித்யர்களுடன் நான் இருப்பேனாக!

வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர்
வைகுந்தன் தமர் எமர் எமதிடம் புகுதென்று
வைகுந்தத்து அமரரும் முனிவரும் வியந்தனர்
வைகுந்தம் புகுவதும் மண்ணவர் விதியே
- நம்மாழ்வார், திருவாய்மொழி 10-9-9

ஸம்ஸாரத்தில் சப்தாதி விஷயத்திலே திளைத்த பக்தர்கள் வைகுந்ததம் புகுவது கடல் நீர் மலைஉச்சி மேல் ஏறிக்கொள்வது போலே (ஈடு)

வாசலில் வானவர் - வரவேற்பு

தமர் எமர் எம்பெருமானுக்கு ஸேஷ பூதர்களான் நீங்கள் எமக்கு ஸ்வாமிகள்

அமரரும் முனிவரும் கைங்கர்யத்திலே மகிழும் நித்யரும் (லக்ஷ்மணன் போலே), குணானுபவத்திலே மகிழும் நித்யரும் (பரதன் போலே) வியந்தனர்.

மண்ணவர் விதியே என்றேனும் ஒரு நாள் எல்லோரும் அடைய வேண்டியதே

27-101 பிரபன்னன் திருநாட்டுக்கு எழுந்தருளுவது யாம் பெற்ற இன்பம் என்று நித்யர்கள் அவன் திருவடிகளைக் கழுவினர்.

விதி வகை புகுந்தனர் என்று நல் வேதியர்
பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்
நிதியும் நற்சுண்ணமும் நிறை குட விளக்கமும்
மதிமுக மடந்தையர் ஏந்தினர் வந்தே
- நம்மாழ்வார், திருவாய்மொழி 10-9-10

விதி வகை - பகவத் அனுபவம் கூடி எம் கோஷ்டியில் வந்து வந்து சேர்ந்தது எங்களுடைய பாக்யம்
பாங்கினில் பாதங்கள் கழுவினர் அசூயை இல்லாமல் முக்தனுடைய திருவடி அலம்பி
நிதியும் நற்சுண்ணமும் நிறை குட விளக்கமும் பூர்ண கும்பம், மங்களகரமான வஸ்துக்கள் சடாரி இவறை ஸாதித்து. நிதி என்பது சடாரி
மதி முக மடந்தையர் - ஸேஷத்வ பாரதந்திர்யர்களான ஞானம் நிரம்பிய நித்யர்கள்

27-102 முக்தன் வந்தடைந்த காலம் வேறே தவிர அவனுடைய ஆனந்தம் நித்யருக்கு நிகரே. அது *கூடி இருந்து குளிர்ந்து*. கால தத்வத்திற்கோ பரமபதத்தில் ஆட்சி இல்லை.

ப்ரபன்னனுக்கு கர்மாதீனமாய் பகவத் ப்ராப்தியை இழந்து மோக்ஷம் அடைய கால தாமதம் ஆகியிருக்கலாமே தவிர அவனுக்கு கிடைக்கும் அனுபவத்தில் ஏற்ற தாழ்வு கிடையாது.

உண்ணும் பொருள் ஒன்றேயாயினும் அதை அவரவர் வேண்டிய அளவு உண்பது, அளவில் வேறுபாடே தவிர ஆனந்தம் சரிசமமே. சர்க்கரை பொங்கல் அவரவர் விருப்பதிற்கு ஏற்க உண்பது.

27-103 பரமபத்தில் ப்ரபன்னனின் அனுபவம் அந்தமில் பேரின்பம். அடியார்கள் குழாங்களுடன் கூடுவது என்று கொலோ என்று அநாதியான நித்யர்களுடன் இன்று வந்தடைந்த ப்ரபன்னன் வாசியின்றி எம்பெருமானை அனுபவிக்கிறான்.

முக்தனின் இன்பதிற்கு அளவோ, குறைவோ, கால வரம்போ இல்லை. அந்தமில் பேரின்பம் - எல்லையில்லாத பேரின்பம்

வந்தவர் எதிர்கொள்ள மாமணி மண்டபத்து
அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்தனர்
கொந்தலர் பொழில் குருகூர்ச் சடகோபன் சொல்
சந்தங்கள் ஆயிரத்து இவை வல்லார் முனிவரே
- நம்மாழ்வார், திருவாய்மொழி 10-9-11

ஏதத் ஸாம க3ாயந்நாஸ்தே|
ஹா வுஹா வுஹா வுஹா வு |
அஹமந்ந மஹமந்ந மஹமந்நம் |
அஹமந்நாதே3ாS ஹமந்நாதே3ாS ஹமந்நாத3: ||
- தைத்ரீய ப்ருகு 10-6

எம்பெருமானை அடைந்த முக்தன் ஸாமத்தைப் பாடிக் கொண்டு இருக்கிறான். நான் எம்பெருமானுக்கு அன்னமாய் இருப்பவன். நான் அவனுடைய ப்ரீதி என்னும் அன்னத்தை புஜிப்பவன்.

27-104 பரமபத்தில் பகவனோடு ஸாம்யம் அஸம்பூர்ணம். ஜீவ ஈச்வர பேதமும், பரஸ்பர ஜீவ பேதமும் ஸ்வாபாவிகம். ஜகத் வ்யாபாரங்கள் ஈச்வரனுக்கே. கைங்கர்யங்கள் ஜீவனுக்கே. ஜீவனின் ஆனந்த எல்லையின் போக்குவீடு கைங்கர்யமே

ஸாயுஜ்யம் ப்ரதிபந்தா யே தீவ்ரப4க்தாஸ் தபஸ்விந: |
கிங்கரா மம தே நித்யம் ப4வந்தி நிருபத்3ரவா: ||
- பரம ஸம்ஹிதை

எவன் பக்தியும், ப்ரபத்தியான தவமும் செய்தானோ அவன் என்னுடன் ஸாயுஜ்யம் அடைந்து ஸம்ஸாரக் கடல் நீங்கி, எப்போதும் எனக்கு கைங்கர்யம் செய்பவன் ஆவான்

ததா வித்வாந் புண்யபாபே விதூய
நிரஞ்சந: பரமம் ஸாம்யம் உபைதி:
முண்டக உபனிஷத் 3-1-3

இங்கு ஸாம்யம்தான். ஐக்யம் இல்லை. பகவான் முக்தர்களுக்கு எல்லாவற்றையும் தருகிறான். வேதங்களும் பகவானோடு பரம ஸாம்யம்தான் மோக்ஷம் என்றது. ஆனால் உண்மையில் மோக்ஷம் என்பது உனக்கு பணி செய்வதே

இத3ம் ஜ்ஞாநம் உபாஶ்ரித்ய மம ஸாத4ர்ம்யம் ஆக3தா:
ஸர்கே3 அபி ந உபாஜயந்தே ப்ரளயே ந வ்யத2ந்தி ச
பகவத் கீதை 14-2

இந்த ஞானத்தை அடைந்தவர் ஸ்ருஷ்டி, ப்ரளயத்திற்கு அப்பாற்பட்டவர். பக்தியோ ப்ரபதியோ செய்து பரமபதம் அடைந்த முக்தன் என்னுடன் பலவகையிலும் ஸாம்யம் பெறுகிறான்.

இங்கும் பகவானுக்கு ஸமமே தவிர பகவானாகவே ஆவதில்லை. முக்தியிலும் ஜீவன் தனிப்பட்ட தத்துவமே. ஆகதா: என்ற பன்மைச்சொல் பல என்று காட்டுகிறது. ஜீவன்கள் பல. அவை ஈச்வரனைவிட வேறான தத்துவம்.

27-105 கடைசி பத்தில் எம்பெருமானுக்கு திருவாரதனத்தைச் சொல்லி இப்பாசுரத்தில் அந்தர்யாமி ஆராதனம் அநுஸந்தானம். உண்ணும்போது கோவிந்தனை சொல்ல வேண்டும் என்பதால் கோவிந்தா நாம ஸங்கீர்த்தனம்.

உத்திஷ்டந் சிந்தயந் ஹரிம் வ்ரஜம் சிந்தயந் கேஸவம்
புஞ்ஜஞ் சிந்தயந் கோவிந்தம் ஸ்வபஞ் சிந்தயந் மாதவம்

27-106 ஞானத்திற்கு ப்ரதானம் ஆகார சுத்தி. ஸத்வ ஆகாரங்கள் ஸாத்விக ஞானத்தை வளர்க்கும். அந்த ஞானத்தை அளிப்பதோ சீர் கோவிந்தன்

ஆஹார சுத்தௌ ஸத் த்வ சுத்தி:
ஸத் த்வசுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:

27-107 பகவத் ப்ரஸாதமான வஸ்துவைத்தான் உபயோகிக்க வேணும் என்பதை சூடகமே இத்யாதிகளில் சொல்லியது. இது பஞ்ச ப்ராணஹீதிகளை காட்டுகிறது. *ஆடை உடுப்போம்* என்பது ப்ராணனனுக்கு நீராகிய ஆடை உடுப்பது. *பாற்சோறு* என்பது பலவிதமான அன்ன வஸ்துக்கள். *கூடியிருந்து* என்பது அதிதி, சுற்றத்தாருடன் சேர்ந்து புஜிப்பது. *குளிர்ந்து* என்பது கடைசியில் குளிர்ந்த தயிர், மோர், பானகம் போன்றவை ஸமர்பிப்பது.

27-108 மோஷ தெசையில் கிடைக்கும் உயர்ந்த ப்ரம்மானுபவத்தை இங்கேயே அனுஸந்தானம். அதை இப்பாசுரத்தில் சொன்னது.

பூவளரும் திரு மாது புணர்ந்த நம் புண்ணியனார்
தா வளமான தனித்திவம் சேர்ந்து தமருடனே

நாவளரும் பெரு நான்மறை ஓதிய கீதம் எலாம்
பாவளரும் தமிழ் பல்லாண்டிசையுடன் பாடுவமே
- ஸ்வாமி தேசிகன், பரமபத ஸோபானம் 18

மாளாத வினை அனைத்தும் மாள நாம் போய்
வான் ஏறி மலர் மகளார் அன்பு பூணும்
தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு
தொழுது உகந்து தோத்திரங்கள் பாடி ஆடி
கேளாத பழமறையின் கீதம் கேட்டுக்
கிடையாத பேரின்பம் பெருக நாளும்
மீளாத பேரரடிமைக்கு அன்பு பெற்றோம்
மேதினியில் இருக்கின்றோம் விதியினாலே
- ஸ்வாமி தேசிகன் பரமபத சோபானம் 21

எளிதாய் ஒழியாத கர்மாக்கள் எல்லாம் நாம் அனுஸந்தித்த ப்ரபத்தி என்னும் உபாயத்தால் கழிகிறது. அர்ச்சிராதி மார்கமாய் பரமபத்தை அடைந்து பிராட்டிக்கு ப்ரியமான எம்பெருமானுக்கு பணி செய்து, வணங்கி, மகிழ்ந்து ஸ்தோத்திரங்கள் சொல்லி, நடனமாடி, இதுவரை கேட்காத வேதங்களின் திவ்யமான காநத்தைக் கேட்கிறோம். மற்றையவர்க்கு கிடைக்காத என்றும் பெருகிக்கொண்டு இருக்கும், திரும்புதல் இல்லாத பணிசெய்வதற்கு காரணமான எம்பெருமானின் திருவருள் பெற்றோம்.

ஆனால் எதற்கு இன்னமும் பூமியில் இருக்கிறோம்? நம்மைக் கொண்டு மற்ற சேதனரை வழி திருத்தி எம்பெருமானிடம் சேர்ப்பிக்க வேணும் என்று அவன் ஸங்கல்பம் போலும்! அர்ச்சை அவதாரங்களில் ஈடுபடவும், ஆழ்வார் ஆசார்ய ஸூக்திகளை அனுபவிக்கவும்தான் இன்னமும் நாம் உயிரோடு இருக்கிறோம்.